IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 176/2021

P.W.1 - ராஜசெல்வேந்திரன்

DATE - 07.10.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **07.10.2025.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எனது குறுக்கு விசாரணையில் மனு செய்ய கூறிவிட்டு தற்போது அதற்கான எந்த முயற்சியும் எடுக்காமல் இருப்பதால் பொய்யான ஆவணங்களை வைத்து தாவா தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. கிரி இறந்தபோது கொரோனா காலம் என்பதால் இறப்பிற்கு நான் செல்லவில்லை ஆனால் கிரி இறந்த விவரம் எனக்கு தெரியும். எனக்கு கிரியையும் தெரியாது அவரது தாயார் ஜானகியம்மாளையும் தெரியாது கிரி இறந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. உண்மையில் அவர்களை தெரிநிதிருந்தால் வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு கிரிக்கு 29.09.2021 இல் அனுப்பி இருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. கிரி உடல்நிலை சரியில்லாமல் கொரோனாவால் பாதிக்கப்பட்டு பல நாட்கள் மருத்துவமனியல் சிகிச்சையிலிருந்து 13.05.2021 அன்று இறந்துவிட்டார் என்பது கூட எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சாட்சி செந்தில் தீப்பெட்டி தயாரிப்பதற்கான மூல பொருட்களை கிரி அவர்கள் வீட்டிற்கு முன்பு வைத்திருந்தார். நான் சாட்சி செந்தில், பழனிசாமி மூவரும் சேர்ந்து கிரி மற்றும் அவரது தாயார் மீது புரோ நோட் பொய்யா தயார் செய்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் கிரிக்கும் எவ்வித சொத்தும் இல்லைஎன்றும் வருமானமும் இல்லை என்றும் அதனால் அவர்கள் மீது

கடன் நிவாரன சட்டத்தின்படி தாவா தாக்கல் செய்ய எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளுக்கும் பிரதிவாதிக்கும் உள்ள முன்விரோதத்தை பயன்படுத்தி நாங்கள் பொய்யாக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றும் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டது).

N. Rajasekaran

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 07.10.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

7.10.25

Additional District Judge(FTC),
Vellore.